02. ஒரு வார்த்தை (திருவிருந்து பாடல்)
இயல்: திரு.கிறிஸ்து ராஜன்
இசை மற்றும் பாடியவர்: திரு.என்சோன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

ஒரு வார்த்தை சொன்னால் போதும் - என் யேசுவே
எனதான்மா நலமாகுமே.
எனதுள்ளம் நீர் வாழவே - என் தேவனே
தகுமென்ற நிலை காணவே
உதவாத எனைத் தேடியே, உறவான என் தெய்வமே
உயிராக எனைச் சேரவே, உணவான என் சொந்தமே.

சரணம்

1. அப்பம் உமது அடையாளம், பகிர்ந்திட அதுவே உணவாகும்
   இரத்தம் பலியின் நினைவாகும், பருகிட அதுவே இரசமாகும்
   அணுவின் அசைவுமுதல் அனைத்தும் ஆனவரே
   ஒருவார்த்தை போதும் ஆன்மா நலமாகும்.

2. உண்மை உமது மொழியாகும், உயர்ந்திட அதுவே வழியாகும்
   தன்னை ஒறுத்தல் சிறப்பாகும், தலைமகன் குணமே அதுவாகும்
   கொடியில் கிளைகள் என இணைந்திட வேண்டுகிறேன்
   ஒருவார்த்தை போதும் ஆன்மா நலமாகும்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Easter 2021)**